**செய்தி வெளியீடு எண்: 61/2022** **நாள்: 16.07.2022**

**மெட்ரோ இரயிலில் இன்று (16.07.2022) 100 குழந்தைகள் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் பயணம் செய்தனர்**

சென்னை மெட்ரோ இரயிலில் 100 குழந்தைகள் இன்று (16.07.2022) அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையம் வரை மெட்ரோ இரயிலில் பயணம் செய்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், டர்னிங் பாயிண்ட் கல்வி அறக்கட்டளையுடன் இணைந்து இன்று (16.07.2022) 100 குழந்தைகள் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையம் வரை மெட்ரோ இரயிலில் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் பயணம் செய்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை பாதுகாப்பு அதிகாரி டாக்டர். எஸ். பிராபாகரன், டர்னிங் பாயிண்ட் கல்வி அறக்கட்டளையின் தன்னார்வலர்கள், மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த பயணத்தின் போது உடன் சென்றிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**